**அக்டோபர் – 23**

# TNPSC துளிகள்

- ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் போர் தயார்நிலை மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த ராணுவ நடவடிக்கைகளை சோதிப்பதற்காக இந்திய ராணுவம் அகண்ட் பிரஹார்-II (Akhand Prahar-II) கூட்டுப் பயிற்சியை மேற்கொண்டது.
- ஏ.பி. முல்லர்-மெர்ஸ்க் (A.P. Moller-Maersk) நிறுவனம் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சென்னை அருகே உள்ள லார்சன் அண்ட் டூப்ரோ (L&T) காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளத்தில் தனது சிங்கப்பூர் கொடியிடப்பட்ட கொள்கலன் கப்பலான மெர்ஸ்க் சட்டோகிராமுக்கான (Maersk Chattogram) முதல் உலர் கப்பல்துறை (drydocking) பராமரிப்புப் பணிகளை இந்தியாவில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.
  - உலர் கப்பல்துறை என்பது ஆய்வு, பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பதற்காக ஒரு கப்பலை தண்ணீரிலிருந்து வெளியே எடுப்பதை உள்ளடக்கியதாகும்.
- ஜிம்பாப்வேயில் வசிக்கும் 14 வயதான இங்கிலாந்து புகைப்படக் கலைஞர் ஆஸ்கார் விட்ஃபீல்ட், 2026 ஆம் ஆண்டின் இளம் வனவிலங்கு புகைப்படக் கலைஞர் விருதை வென்றார்.
- இந்தியாவில் முற்றிய உணவுக்குழாய் செதிள் உயிரணு புற்றுநோய்க்காக (Esophageal Squamous Cell Carcinoma - ESCC) சைடோர்வி (டோரிபாலிமாப்) மருந்தை பயன்படுத்த டாக்டர் ரெட்டிஸ் லேபரட்டரீஸ் நிறுவனம் இந்திய மருந்து கட்டுப்பாட்டு ஜெனரலிடம் (DCGI) இருந்து ஒப்புதல் பெற்றுள்ளது.
  - உணவுக்குழாய் செதிள் உயிரணு புற்றுநோய் (ESCC) என்பது ஒரு வகையான உணவுக்குழாய் புற்றுநோயாகும், இதில் உணவுக்குழாயின் உட்புறத்தில் உள்ள செதிள் உயிரணுக்களில் புற்றுநோய் உருவாகிறது.
- வாழும் பாரம்பரியத்தின் பன்முகத்தன்மையைக் கொண்டாடுவதற்காகவும், அதைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காகவும் ஆண்டுதோறும் அக்டோபர் 17 அன்று அருவப் பண்பாட்டு மரபுக்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற 42வது யுனெஸ்கோ பொது மாநாட்டில் இந்த நாள் அறிவிக்கப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு மழைநீர் சேகரிப்பு பிரச்சாரம்

- நீர் சேமிப்பு மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டலை மேம்படுத்தும் வகையில் மாநிலம் தழுவிய மழைநீர் சேகரிப்பு (RWH) பிரச்சாரத்திற்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.
- இந்தப் பிரச்சாரம் ஏற்கனவே உள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை புதுப்பிக்கும், மேலும் வீடுகள், குடியிருப்புகள், நிறுவனங்கள், வணிக கட்டிடங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் புதிய வசதிகளை உருவாக்கும்.
- நிலத்தடி நீர் செறிவூட்டலை மேம்படுத்த தண்ணீர் எடுக்கும் இடங்களுக்கு அருகில் தடுப்பணைகள் மற்றும் உறிஞ்சுகுழிகள் கட்டப்படும், அதே சமயம் சேதமடைந்த அமைப்புகள் சரி செய்யப் படும்.
- தமிழ்நாடு 2002 ஆம் ஆண்டில் மழைநீர் சேகரிப்பை ஒரு மாநிலக் கொள்கையாக அறிமுகப் படுத்தியது, இதன்மூலம் கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு

கட்டமைப்புகளை அமைப்பது கட்டாயமாக்கப்பட்டது.

❖ 1,202 பிர்காக்களில் (வருவாய் உட்பிரிவுகள்), 476 பிர்காக்களில் நிலத்தடி நீர்மட்டம் திருப்திகரமான அளவில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.




## தமிழ்நாட்டில் TNRERA மறுசீரமைப்பு




❖ தமிழ்நாடு நில மனை ஒழுங்குமுறை ஆணையத்தை (TNRERA) தமிழ்நாடு அரசு மறு சீரமைத்து, அதன் தலைவராக ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி (ஐஏஎஸ்) அதிகாரி கே. பணீந்திர ரெட்டியை நியமித்துள்ளது.

❖ TNRERA என்பது தமிழ்நாட்டில் நில மனைச் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம், 2016 ஐச் (RERA) செயல்படுத்துவதற்குப் பொறுப்பான மாநில அளவிலான ஆணையமாகும்.

❖ இது நில மனைத் துறையை ஒழுங்குபடுத்துகிறது, வீடு வாங்குபவர்களைப் பாதுகாக்கிறது மற்றும் நில மனைத் திட்டங்கள் மற்றும் பரிவர்த்தனைகளில் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிக்கிறது.

❖ ஓய்வு பெற்ற அதிகாரிகளான ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் மைதிலி கே. ராஜேந்திரன், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி எஸ். கிருபாகரன் மதுரம் மற்றும் ஓய்வு பெற்ற பொதுப்பணித்துறை முதன்மைப் பொறியாளர் கே.பி. சத்தியமூர்த்தி ஆகியோர்

உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

- TNRERA மறுசீரமைக்கப்படும் வரை அல்லது ஆறு மாதங்களுக்கு என இதில் எது முன்னதோ அதுவரை ஆணையத்தை அரசு முன்னதாக முடக்கி வைத்திருந்தது, இக்காலத்தில் கே. பணீந்திர ரெட்டி தலைவராகப் பணியாற்றினார்.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா - நியூசிலாந்து தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் 2026

- இந்தியா - நியூசிலாந்து இடையேயான தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் (FTA) 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று நடைமுறைக்கு வந்தது.
- 100% இந்தியப் பொருட்களுக்கான வரிகளை நியூசிலாந்து நீக்கியுள்ளது, அதே சமயம் தேர்ந்தெடுக்கப்பட்ட நியூசிலாந்து இறக்குமதிகளுக்கு இந்தியா சுங்கவரிச் சலுகைகளைத் தொடங்கியுள்ளது.
- இந்தியா தனது 70% சுங்கவரிப் பொருட்களுக்கு சலுகைகளை வழங்கும், இது தற்போதைய இருதரப்பு வர்த்தக மதிப்பில் சுமார் 95% ஐ உள்ளடக்கியது, வரியற்ற அணுகல் கட்டம் கட்டமாக 57% இலிருந்து 82% ஆக அதிகரிக்கிறது.
- 15 ஆண்டுகளில் இந்தியாவில் 20 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீட்டை (FDI) எளிதாக்குவதற்கு நியூசிலாந்து உறுதியளித்துள்ளது.
- இந்த ஒப்பந்தம் பொருட்கள் மற்றும் சேவைகளில் இருதரப்பு வர்த்தகத்தை 2030 ஆம் ஆண்டுக்குள் 7 பில்லியன் நியூசிலாந்து டாலராக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்தியாவின் 17வது செயல்பாட்டுத் தடையில்லா வர்த்தக ஒப்பந்தமாகும்.

The **India-New Zealand** Free Trade Agreement (FTA) came into **force** on **October 20,** giving Indian merchandise **exports 100%** duty-free access to **New Zealand.**

It is **India's** seventh **FTA** to become **operational** in the past **five years.**

## அமெரிக்க தேசியப் பூங்கா - சிரிகாஹுவா

- சிரிகாஹுவா தேசியப் பூங்கா சட்டத்தில் அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டதையடுத்து, அரிசோனாவில் உள்ள சிரிகாஹுவா அதிகாரப் பூர்வமாக அமெரிக்காவின் 64வது தேசியப் பூங்காவாக மாறியது.
- சிரிகாஹுவா முன்னதாக ஒரு தேசிய நினைவுச்சின்னமாக இருந்தது மற்றும் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பாதுகாக்கப்பட்டு வந்தது.
- இந்தப் பூங்கா அரிசோனாவின் டியூசனில் இருந்து தென்கிழக்கே 120 மைல் தொலைவில் சிரிகாஹுவா மலைகளில் சுமார் 12,025 ஏக்கர் பரப்பளவைக் கொண்டு உள்ளது.
- இது அரிசோனாவின் நான்காவது தேசியப் பூங்காவாகவும், 2020 ஆம் ஆண்டிற்குப்

பிறகு நிறுவப்பட்ட முதல் புதிய அமெரிக்க தேசியப் பூங்காவாகவும் மாறியது.

- சிரிகாஹுவாவின் உயரமான மற்றும் அசாதாரணமான பாறை அமைப்புகளின் காரணமாக இது "பாறைகளின் அற்புத உலகம்" என்று அழைக்கப்படுகிறது.




## CICA உச்சி மாநாடு 2026




- ஆசியாவில் தொடர்பு மற்றும் நம்பிக்கை வளர்க்கும் நடவடிக்கைகளுக்கான மாநாட்டின் (CICA) 7 வது உச்சிமாநாடு அஜர்பைஜானின் பாகுவில் நடைபெற்றது, இதில் ஆசியாவில் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் ஒருமித்த அடிப்படையிலான ஒத்துழைப்பிற்கான தனது உறுதிப்பாட்டை இந்தியா மீண்டும் வலியுறுத்தியது.
- அனைத்து வகையான பயங்கரவாதத்திற்கும் எதிராக ஒன்றிணைய CICA உறுப்பினர்களுக்கு இந்தியா அழைப்பு விடுத்ததுடன், தேசிய இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கான மரியாதையை வலியுறுத்தியது.
- பிராந்திய இணைப்புத் திட்டங்கள் வெளிப்படையானதாகவும், நிதி ரீதியாக சாத்தியமானதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும் என்று இந்தியா கூறியது.
- இந்த உச்சிமாநாடு பாகு பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது, ஆசியாவில் நம்பிக்கையை வளர்ப்பதற்கும் மேம்பாட்டிற்கும் இணைப்பு, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றை முக்கியமானதாக முன்னிலைப் படுத்தியது.

- இந்தியா CICA அமைப்பின் நிறுவன உறுப்பினராக உள்ளது மற்றும் ஆசியாவில் உரையாடல், கருத்தொற்றுமை உருவாக்கம் மற்றும் ஒத்துழைப்புக்கான ஒரு முக்கியமான தளமாக இதைக் கருதுகிறது.

## எபோலா புண்டிபுகியோ பாதிப்பு - நைஜீரியா

- நைஜீரியாவானது வெளிநாட்டிலிருந்து வந்த நபருக்கு முதன்முறையாக எபோலா புண்டிபுகியோ வைரஸ் நோய் (BDBV) பாதிப்பைப் பதிவு செய்துள்ளது, இதன் மூலம் 2026 ஆம் ஆண்டு நோய்ப்பரவலில் BDBV ஐப் பதிவு செய்த ஐந்தாவது நாடாக இது மாறி உள்ளது.
- எபோலா புண்டிபுகியோ வைரஸ் நோய் (BDBV) என்பது புண்டிபுகியோ வைரஸால் ஏற்படும் ஒரு கடுமையான நோயாகும், இது 2007 ஆம் ஆண்டில் உகாண்டாவில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட எபோலா வைரஸ் இனத்தின் ஒரு வகை ஆகும்.
- பாதிக்கப்பட்ட நபர் அல்லது விலங்கின் இரத்தம் அல்லது உடல் திரவங்களுடனான நேரடித் தொடர்பின் மூலம் இது முக்கியமாகப் பரவுகிறது, மேலும் காய்ச்சல், பலவீனம், வாந்தி, வயிற்றுப்போக்கு மற்றும் இரத்தப்போக்கு ஆகியவற்றை ஏற்படுத்தும்.
- உகாண்டாவின் புண்டிபுகியோ மாவட்டத்தில் ஏற்பட்ட ஒரு நோய்ப்பரவலின் போது இந்த நோய் முதன்முதலில் கண்டறியப்பட்டது, இதன் காரணமாக இந்த வைரஸுக்கு இப்பெயர் வந்தது.
- நைஜீரியாவிற்கு முன்பு, உகாண்டா, காங்கோ ஜனநாயகக் குடியரசு (DRC), தெற்கு சூடான் மற்றும் கென்யாவில் BDBV பாதிப்புகள் பதிவாகியுள்ளன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இரண்டு புதிய கடல் மீன் சிற்றினங்கள் கண்டுபிடிப்பு

- சென்னையில் உள்ள இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் (ZSI) கடல் உயிரியல் மண்டல மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், மணற்கெளுத்தி மற்றும் மின்சாரத் திருக்கை ஆகிய இரண்டு புதிய கடல் மீன் இனங்களைக்

கண்டுபிடித்துள்ளனர்.

- மணற்கெளுத்தி என்பது ஆழமற்ற கடல்களில் மணல் அல்லது பாறைகளின் மீது காணப்படும் ஒரு அடிமட்ட மீன் ஆகும். இது ஓட்டுடலிகள், பலவகைப்புழுக்கள் மற்றும் இளம் மீன்களை உணவாக உட்கொள்கிறது.
- மின்சாரத் திருக்கை, அரபிக் கடல் மற்றும் வங்காள விரிகுடாவின் ஆழமான பகுதிகளில் கண்டறியப்பட்டது; ஆராய்ச்சியாளர்களால் நான்கு மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.
- இந்த மாதிரிகள் சென்னை, தீகா, விசாகப்பட்டினம் மற்றும் காக்கிநாடா கடற்பரப்பில் 30-80 மீட்டர் ஆழத்தில் இருந்து சேகரிக்கப்பட்டன.
- இந்தியாவின் கிழக்கு கண்டத்திட்டுப் பகுதியில் உள்ள அடிமட்ட மீன்களின் பன்முகத் தன்மை இன்னும் போதுமான அளவு ஆராயப்படவில்லை என்பதை இந்தக் கண்டுபிடிப்பு காட்டுகிறது.
- இந்தியக் கடற்பரப்பில் இதுவரை 17 வகையான மணற்கெளுத்தி இனங்கள் கண்டறியப் பட்டுள்ளன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக மேம்பாட்டு அறிக்கை 2026

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY), IndiaAI திட்டத்தின் கீழ் உலக வங்கி குழுமத்தின் 2026 ஆம் ஆண்டிற்கான உலக மேம்பாட்டு அறிக்கையை (WDR): செயற்கை நுண்ணறிவின் வாக்குறுதி என்ற தலைப்பில் வெளியிட்டது.
- ChatGPT ஆறு மாதங்களுக்குள் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இருந்து அதன் 50% பயன்பாட்டை எட்டியுள்ளது, இது மின்சாரம் மற்றும் இணையம் போன்ற முந்தைய தொழில்நுட்பங்களை விட செயற்கை நுண்ணறிவு (AI) வேகமாகப் பரவி வருவதைக் காட்டுகிறது.
- இந்த அறிக்கை AI வளர்ச்சியின் மூன்று C-களை (Capabilities, Concentration and Complements - திறன்கள், ஒருமுகப்படுத்துதல் மற்றும் துணைக்கூறுகள்) முன்னிலைப்படுத்துகிறது, இது AI இன் பயன்பாடுகள், மேம்பட்ட AI வளங்களின் செறிவு மற்றும் உள்கட்டமைப்பு மற்றும் நிறுவனங்களின் தேவையை உள்ளடக்கியது.
- சிறிய AI குறிப்பிட்ட தேவைகளுக்காக சிறிய, குறைந்த-கணினி மாதிரிகளைப் பயன்படுத்துகிறது; இந்தியாவில் உள்ள வாத்வானி AI இன் 'Cough Against TB' மற்றும் கானாவில் உள்ள ரோரி கற்றல் தளம் ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.
- இந்தியாவில், AI அடிப்படையிலான வானிலை முன்னறிவிப்புகள் தெலங்கானாவில் உள்ள ஒரு சிறு விவசாயிக்கு 560 அமெரிக்க டாலர்கள் வரை சேமிப்பை உருவாக்கியது.

- இந்த அறிக்கை "ஏற்றுக்கொள், மாற்றியமை மற்றும் முன்னேறு" என்ற அணுகுமுறையை முதலில் இருக்கும் AI கருவிகளைப் பயன்படுத்தவும், பின்னர் அவற்றை உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கவும், மேலும் மேம்பட்ட AI திறன்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் உருவாக்கவும் எனப் பரிந்துரைக்கிறது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### உம்மிடி எத்திராஜ் மறைவு




- வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோலை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றிய உம்மிடி எத்திராஜ் தனது 99 வயதில் சென்னையில் காலமானார்.
- பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திர இந்தியாவிற்கு அதிகார மாற்றத்தைக் குறிக்கும் வகையில் 1947 ஆம் ஆண்டில் தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி செங்கோலை

வடிவமைப்பதில் எத்திராஜ் ஈடுபட்டார்.

- 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் தேதி இரவு, தமிழ்நாட்டின் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த பூசாரிகளால் ஜவஹர்லால் நேருவிடம் செங்கோல் வழங்கப் பட்டது.
- 125 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட நகை நிறுவனமான உம்மிடி ஜூவல்லர்ஸால் இந்த செங்கோல் வடிவமைக்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு மே 28 அன்று, பிரதமர் நரேந்திர மோடி புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் செங்கோலை முறைப்படி நிறுவினார்.

### யூரோபிசிக்ஸ் பரிசு 2026

- ஒரு புதிய வகை காந்த ஒழுங்கான மாற்றுக்காந்தவியலை (altermagnetism) நிறுவியதற்காக, மூன்று அறிவியலாளர்கள் 2026 ஆம் ஆண்டுக்கான யூரோபிசிக்ஸ் பரிசைப் பெற்றனர்.
- ஜைரோ சினோவா, லிபோர் ஸ்மெஜ்கல் மற்றும் தாமஸ் ஜங்வொர்த் ஆகியோர் ஐரோப்பிய இயற்பியல் சங்கத்தின் (EPS) திண்மப் பொருள் பிரிவிலிருந்து (Condensed Matter Division) இப்பரிசைப் பெற்றனர்.
- மாற்றுக்காந்தவியலானது, ஃபெரோகாந்தவியல் (ferromagnetism) மற்றும் ஆன்டிஃபெரோ காந்தவியல் (antiferromagnetism) ஆகியவற்றின் அம்சங்களை, ஈடு செய்யப் பட்ட காந்தத் திருப்புத்திறன்கள் மற்றும் சுழற்சி-முனைவாக்கப்பட்ட மின்னணுப் பட்டைகளுடன் இணைக்கிறது.
- "மாற்றுக்காந்தவியல்" என்ற சொல் 2022 ஆம் ஆண்டில் லிபோர் ஸ்மெஜ்கல் மற்றும் அவரது சகாக்களால் முன்மொழியப்பட்டது, அதே சமயம் இந்தக் கருத்து ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் பல்கலைக்கழகம், மெய்ன்ஸில் (ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் பல்கலைக்கழகம், மெய்ன்ஸ்) மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்டது.
- தகவல்களைச் சேமிக்கவும் செயலாக்கவும் மின்சுமையுடன் மின்னணுச் சுழற்சியையும் பயன்படுத்தும் ஸ்பின்ட்ரானிக்ஸுக்கு (spintronics) மாற்றுக்காந்தவியல் முக்கியமானது.




## இதரச் செய்திகள்

### யுனெஸ்கோவின் புதிய உத்தேசப் பட்டியலில் உள்ள இடங்கள்

- பராடாங்கின் கார்ஸ்ட்-மண் எரிமலை வளாகம், அந்தமான் கீழமிழ்தல் எரிமலைகள் மற்றும் சிர்பூர் பண்பாட்டு மற்றும் தொல்பொருள் நிலப்பரப்பு ஆகிய மூன்று இந்திய

இடங்கள் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று யுனெஸ்கோ (ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு) உலக மரபு உத்தேசப் பட்டியலில் சேர்க்கப் பட்டன.

- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள பராடாங் வளாகத்தில் சுண்ணாம்பு குகைகள் மற்றும் ஜல்கி குகைப் பகுதி உட்பட செயலில் உள்ள மண் எரிமலைகள் உள்ளன.
- அந்தமான் கீழமிழ்தல் எரிமலைகளில் அந்தமான் கடலில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளான பேரன் தீவு மற்றும் நார்கொண்டாம் தீவு ஆகியவை அடங்கும்.
- சத்தீஸ்கரின் மகாசமுந்த் மாவட்டத்தில் உள்ள சிர்பூர் என்பது மகாநதி ஆற்றின் வழியே அமைந்துள்ள ஒரு பழங்கால பண்பாட்டு மற்றும் தொல்பொருள் நிலப்பரப்பு ஆகும் என்பதோடு இதில் கி.பி 5 முதல் 12 ஆம் நூற்றாண்டு வரையிலான நினைவுச் சின்னங்கள் உள்ளன.
- உத்தேசப் பட்டியல் என்பது ஒரு இடத்தை யுனெஸ்கோ உலக மரபுப் பட்டியலுக்குப் பரிந்துரைக்கப் படுவதற்கு முந்தைய முதன்மைப் படியாகும்; இந்தியாவில் தற்போது 45 உலக மரபுத் தளங்கள் உள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★